குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.216/2018

அ.சா.9

2025–ம் ஆண்டு நவம்பர் 19–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் என்கிற மணிகண்டன் | தொழில் | |
| தந்தை பெயர் | கோவிந்தன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.27 மணி,

Accused A4.Karthikraja present. A2.Thamaraiselvan and A3.Narayanan Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. A1.Chinnathangam died and charge abated. Advocate Mr.P.Soundararajan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எல்லாயூரில் குடியிருந்து தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரிகளைத் தெரியும். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு நான் எல்லாயூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி சென்றுகொண்டிருந்தபோது, அ.சா.1 பழனி வீட்டின் முன்பாக போலிசார் இருந்தார்கள். அவர்கள் பிரச்சினை சம்மந்தமாக விசாரிப்பதாக கூறி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவத்தை நான் பார்க்கவில்லை. போலிசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் அ.சா.1, அ.சா.2 குடும்பத்தினருக்கும், எதிரிகளுக்கும் இடையே தடவழி சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், கடந்த 21.10.2017 ஆம் தேதி 17.00 மணியளவில் எதிரிகள் அனைவரும் அ.சா.1 பழனி வீட்டின் முன்பாக வந்து, அ.சா.1 ஐ பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும், 1, 2 எதிரிகள் இருவரும் அ.சா.1 ன் நெஞ்சின்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.19 17:56:34 +0530

மீதும், அல்லையின் மீதும் கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும், அதை தடுக்க வந்த அ.சா.2 ஐ 3, 4 எதிரிகள் இருவரும் கையால் மாறி மாறி அ.சா.2–ன் இரண்டு பக்க அல்லையின் மீதும் குத்தினார் என்றும், அதைத்தொடர்ந்து அ.சா.1, அ.சா.2 இருவரையும் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.33 மணி.**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.19 17:56:37 +0530